Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 65 /2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -4

| | | | |
|---|---|---|---|
| Name: | காதர் கான் | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | முகமது கான் | Religion: | |
| Village: | அங்கநாதவலசை | Age: | 54 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 26.03.2026 நேரம் : 12.35 PM

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.5 ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

அ.சா.4 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.தினேஷ் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. சையது அப்சல் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம்மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது அம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 20.04.2024 ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. சையது அப்சல் அவர்கள் அம்பலூர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில்

இருந்த அனிதா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். **அந்த புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. புகார் வாக்குமூல அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 150/2024 சட்டப்பிரிவுகள் 143, 294(பி), 323,506(2) IPC உடன் இணைந்த பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினார்.

பின்னர் அவரே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 20.04.2024 ம் தேதி மாலை 16.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சூர்யகுமார், முரளி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 3 மற்றும் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே நாளில் சாட்சிகள் திருமால் மற்றும் பிரபு ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கில் எதிரி பயன்படுத்திய இரும்பு கம்பியை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கம்பி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (படிவம் 91 வழக்கு கோப்பில் இல்லாததால் குறியீடு செய்ய இயலவில்லை. )

பின்னர் சாட்சிகள் அனிதா, மாதேஷ்வரன், மனோகரன், பத்மாவதி, ராஜேஷ், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரிகளை தேடிவந்த நிலையில் 21.04.2024 ம் தேதி தெக்குப்பட்டு பஸ் ஸ்டாப்பிடம் எதிரி சந்தீப், அரவிந்த்குமார், திவாகர் ஆகியோர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். நான்கு மற்றும் ஐந்தாம் எதிரிகள் மாண்புமிகு திருப்பத்தூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபரான அனிதா, பத்மாவதி, மனோகரன் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. தினேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ்கள் பெற்றார்.

**அனிதா, பத்மாவதி, மனோகரன் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.த.சா.ஆ 6 முதல் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 143, 294(பி), 323,506(2) IPC உடன் இணைந்த பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சம்மந்தமாக ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். அ.சா.1 அனிதாவின் விபத்து பதிவேட்டுடன் காயச்சான்றுதழில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவருக்கு கீழ் முதுகில் வலி இருப்பதாக தான் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சம்பவயிடம் ராமநாயக்கன்பேட்டை பஸ்ஸ்டேன்ட் என்று தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.2 மனோகரனுக்கும் விபத்து பதிவேட்டுடன் காயச்சான்றுதழில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.அ.சா.3 பத்மாவதி என்பவருக்கும் விபத்து பதிவேட்டுடன் காயச்சான்றுதழில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 ன் தனது வாக்குமூலத்தில் எங்கள் வீட்டிடம் இருந்த இரும்பு கம்பியை ஒருவன் எடுத்து கம்பியை காட்டி எல்லோரையும் கொன்றுவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகள் அனைவரும் கொலைமிரட்டல் விடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுதப்படாத வெள்ளை தாளில் அ.சா.1 இடம் கையொப்பம் வாங்கிக்கொண்டு புகார்வாக்குமூலம் உதவி ஆய்வாளராலே தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலே வைத்து தாயரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 முதல் 3 எதிரிகளை சொல்லும் இடத்தில் சொல்லும் விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவரபுலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக ஒரு தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) காதர் கான்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K